2. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. என். வி. என். சோமு அவர்களும், நானும் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் அன்று உரிமை மீறல் பிரச்னை கொடுத்திருந்தோம்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு அனுமதிக்க மறுத்து விட்டேன் என்று சொல்லி உங்களுக்கு எழுதியிருக்கிறேன். அதைப்பற்றி ஏதாவது பேசுவதாக இருந்தால் என்னுடைய அறையிலே வந்து பேசலாம்.

திரு. கு. பா. பழனியப்பன் : 247 ஆவது விதியின்கீழ் இசைவு மறுத்துள்ளார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தங்கள் மேலான கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவருவது என் கடமை என்று கருதுகிறேன். இன்று மட்டுமல்ல. கடந்த சில நாட்களாக தங்கள் அலுவலகத்தில் இருந்து தாங்கள் அனுப்புகிற கடிதங்களுக்கு விளக்கமோ அல்லது வேறுவகையான விவரங்களோ மன்றத்தில் வந்து கேட்க உறுப்பினர்கள் முற்படுகிறார்கள். இந்த மரபு நம் அவையில் எப்போதுமே இருந்ததில்லை. தங்கள் அறைக்கு வந்து கேட்பதுதான் பொருத்தமாயிருக்கும். தாங்கள்தான் அதுபற்றி தீர்ப்பளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தினசரி அதைத்தான் நான் சொல்கிறேன். யாரும் அறைக்கு வரமாட்டேன் என்கிறார்கள். இந்த உரிமை மீறல் பிரச்சனைக்கு அனுமதி மறுத்திருக்கிறேன். என் அறைக்கு வாருங்கள். இதைப்பற்றி எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் விவாதிக்கலாம்.

திரு. கு. பா. பழனியப்பன் : 247 ஆவது விதியின்கீழ் ஒரு உரிமை மீறல் பிரச்னையை எழுப்பலாம் என்றுதான் இருக்கிறது. அதில் மறுப்பதற்கு விதி இல்லை. குறிப்பிட்ட நிபந்தனைக்குட்பட்டு இருக்கவேண்டும் என்று 249 ஆவது விதியில் இருக்கிறதே தவிர 247 ஆவது விதியின்கீழ் மறுப்பது சரியல்ல என்பது என் அபிப்பிராயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'பேரவைத் தலைவரின் இசைவுடன்' என்றிருக்கிறது. இசைவு மறுப்பது என்பதும் அதில் தொக்கி நிற்கிறது. ஆகவே மறுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். வி. என். சோமு : 247 ஆவது விதியை மட்டும் தாங்கள் மேற்கோள் காட்டி மறுத்திருக்கிறீர்கள். எந்தக் காரணத்திற்காக மறுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட வில்லை. நாங்கள் உரிமைப் பிரச்னைகளை தங்கள் அனுமதியுடன் இந்தச் சட்டமன்றத்தில் எழுப்புவதற்குள்ள விதியே இந்த விதி என்பதைத் தவிர மறுக்கக்கூடியது இதிலே வரவில்லை. அந்த 'இல்லீகாலிட்டியைத்தான்' சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதி மறுப்பதற்கான காரணங்களை எப்போதுமே சொல்வது கிடையாது. 247 ஆவது விதி தெளிவாக இருக்கிறது. பேரவைத் தலைவரின் இசைவுடன் என்றிருக்கிறது. இசைவு இல்லை என்றால் அது போய்விட்டது என்று பொருள். சட்டமன்றப் பேரவை விதிகள் ஒழுங்காகத் தான் எழுதப்பட்டிருக்கின்றன.

*திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, விதிகளில் எழுதப்பட்டிருக்கிற அந்தச் சொற்றொடரில் பேரவைத் தலைவரின் இசைவுடன் என்றால் சட்டமன்றத்தில் ஒரு உரிமைப் பிரச்னையை எழுப்புகிறபோது தங்கள் இசைவுடன் எழுப்புவது என்பதுதான் அதில் மிக முக்கியமாக கருதப்படுகிற கருத்தாகும். சிலநேரங்களில் தலைவர் அவர்கள் இசைவு தராதபோது கூட சட்டமன்றத்தில் பல உறுப்பினர்கள் ஒரே பிரச்னையை வலியுறுத்த வேண்டிய நிலை ஏற்படுமானால் விவாதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடும். ஒன்று தாங்கள் அந்த விதியில் தலைவர் விரும்பாவிட்டால் எந்த ஒரு உரிமைப் பிரச்னையையும் சட்டமன்றத்தில் எழுப்பக் கூடாது என்றாவது ஒரு விதியை சேர்த்துக்கொள்ளவேண்டும். தலைவரின் இசைவுடன் என்று விதியில் இருப்பதால் முதற்கட்டத்தில் இசைவு கிடைப்பதாகத் தான் பொருள், விவாதித்த பின்னால் இதில் உரிமைப் பிரச்னை இல்லை என்று சொல்லக்கூடிய உரிமை தங்களுக்கு இருக்கிறது என்று சொன்னாலும் 'with the Consent of the Speaker' என்று சொல்வதனால் தங்கள் அனுமதி பெற்று எழுந்திருந்து அந்த உரிமைப் பிரச்னையை எழுப்பவேண்டும் என்பதுதானே தவிர எழுப்புவதற்கு அனுமதி இல்லை என்று சொல்வதனால், எழுத்துமூலம் சொல்கிறபோது அதன் அடிப்படையில் அதுபற்றி உண்மை நிலையை விளக்கமுடியாத ஒரு நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, ஏதோ ஒரு வகையில் உறுப்பினர்களுடைய

உரிமை கைவிடப்பட்டதுபோல் தோன்றுகிறது. ஆகவே அவசியமெனில் அதை மாற்றியமைக்க எதிர்காலத்தில் தலைவர் அவர்கள் முயற்சி எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை சுட்சித் தலைவர்கள் எல்லோரும் சேர்ந்து முடிவுசெய்ய வேண்டும். அந்த முடிவுபடி நடத்தப்படும்; நான் மறுக்கப் போவதில்லை. இருக்கின்ற பிரச்னைகளில் சில பிரச்னைகளுக்கு அனுமதி மறுக்க வேண்டியிருக்கிறது. அப்படி அனுமதி மறுக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்படி மறுக்கின்ற உரிமை என்னிடம் இருக்கிறது. இந்தக் குறிப்பிட்ட பிரச்னையைப் பொறுத்த வரையில், பல நேரங்களிலே இந்த சபையில் 5, 5 நிமிடம் ஒவ்வொரு நாளும் பேசப்பட்டு வருகிறது. இதற்கு ஏதாவது ஒரு நாள் முற்றுப் புள்ளி வைக்கவேண்டும். அது இன்றைக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே,

* * * *

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, இது பாயிண்ட் ஆப் ஆர்டரா, பாயிண்ட் ஆப் இன்பர்மேஷனா, கிளாரிபிகேஷனா? என்னவென்று தெரியவில்லை. இப்படி அவருக்கு உரிமை வழங்குவதாக இருந்தால், எங்களுக்கும் வழங்க வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி அவர்கள் கூறியது அனைத்தையும் அவை குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.